அரசு தயாராக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவும் 18,000 வீடுகளுக்கு அரசு கொடுக்கத் தயராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தொடர்பு கொண்டேன். இதிலே தகுதி உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அரசு கொடுக்க தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) குமுளூரில் ஆரம்ப சுகாதார மையம் துவக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ஜெ. லோகாம்பாள் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திருமதி ஜெ. லோகாம்பாள்.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-ல் குமுளூரில் ஒரு ஆரம்ப சுகாதார மையத்திற்காக ரூ. 10,000 செலுத்தி தேவையான நிலம், கட்டடம் வழங்கப்பட்டும் இன்றுவரை ஆரம்ப சுகாதார மையம் துவக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த, அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

குமுளூர் என்னும் பெயரில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இயங்கவில்லை. ஆனால் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் குமுளூர் என்ற கிராமம் உள்ளது. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் மருந்தகம் ஏற்படுத்த வேண்டி ரூ. 10,000, 2—4—1986 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் 0.90 சென்ட் நிலம் தானமாக கொடுப்பதாக 23—5—1989 அன்று ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டது.

2. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகை 93,759 ஆகும். அரசு விதிப்படி 30,000 மக்கட் தொகைக்கு ஒன்று என்ற விகிதப்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்படுகின்றன. மேலும் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கனவே கீழ்க்கண்ட 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. புள்ளம்பாடி,
2. அழுந்தலைப்பூர்
3. ஓரத்தூர்
4. மேலரசூர்
5. பெருவளத்தூர்

3. எனவே புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் கூடுதலாக மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்பொழுது சாத்தியக்கூறுகள் இல்லை.

4. மேலும் குமுளூர் கிராமத்தில் ஒரு துணைச்சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. இந்த துணைச்சுகாதார நிலையம் அழுந்தலைப்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

5. இந்நிலையில் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மக்கள் தற்சமயம் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் மருத்துவ வசதி பெற்று வருவதால் இவர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை.

பிற்பகல் 1–05

திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அறிக்கையில் சாத்தியக்கூறு இல்லை என்று கூறி விட்டார்கள். எனது சொந்த ஊரான குமுளூர் கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமம். அந்த கிராமத்தில் 1986 ஆம் ஆண்டில் மகளிர் மன்றம் சார்பாக பெண்களாகச் சேர்த்து அவர்களுடைய குடும்பத்திற்குக் கூடத் தெரியாமல் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் போட்டு, வீம்புக்காகப் போட்டு- ஆண்கள் அதைக் கட்ட முடியவில்லை என்று விட்டுவிட்டார்கள்- அதைப் பெண்களாக எடுத்து ரூ. 10,000-ஐக் கட்டினார்கள். 1986-ல் கட்டி இன்றுவரையில் 8 வருஷம் ஆகிவிட்டது. எங்களுடைய சொந்த வீட்டையே வாடகை இல்லாமல் அந்த ட்டடத்திற்காகக்கொடுத்திருக்கிறோம். நிலமும் 90 சென்ட்டைக்
க

கொடுத்து இருக்கிறோம். மீதி இடத்திற்கு அங்கே பக்கத்தில் 7 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை கட்டி, எனது சொந்த ஊரில் அதை அமைத்து கொடுக்கும்படியாக, ** உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் **என்பது அவை குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இவ்வளவு சொன்ன பின்னாலே செய்ய வேண்டுமென்ற ஆர்வமும், உணர்வும் இருந்தாலும்கூட, அங்கே 93,000 மக்கள் தொகை இருக்கிறது. ஏற்கனவே, 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போதே இருக்கின்றன. நியாயமாக 3 தான் இருந்திருக்க வேண்டும். ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் மக்கள் தொகைக்கு வருகிற அளவுக்கு உங்களுக்கு இப்பொழுதே கொடுக்கப்பட்டிருக்கிறது. 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. எனவே இருப்பதைக் குறைக்காமல் பார்த்துக் கொண்டாலே நீங்கள் அந்தத் தொகுதிக்குச் செய்கிற நல்ல காரியம். எனவே, இதற்கு மேலே கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. நாம் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று வைத்திருக்கிறோம். அந்த வகையிலே இப்பொழுதே உங்களுக்கு 5 நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், நீங்கள் காட்டியிருக்கின்ற இந்த ஆர்வத்திற்கு எங்களுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கலாமே தவிர, அதற்கு தனியாக ஒன்றையும் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவது போல, ஓரத்தூர் கிராமத்திலே இன்று வரையிலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கவில்லை. தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள ஊர்தான் ஓரத்தூர். பெருவளத் தூரில் ஆரம்பித்திருக்கிறார்கள். அது பக்கத்திலே இல்லை. 10, 11 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அழுந்தலைபூரும் 20, 25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மேலரசூரும் தொலைவில்தான் உள்ளது. குமுளூர் கிராமத்தை ஒட்டி எந்தப் பக்கத்திலும் எந்த ஆஸ்பத்திரியும் இல்லை. ஆகவே, ஆஸ்பத்திரிக்குப் போக போக்குவரத்தும் இல்லாமல் அங்கே மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இதை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஏதாவது தவறான தகவலைத் தந்திருந்தால் உரிய அதிகாரிகள் மீது சரியான நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஆனால் அப்படியே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்காமல் இருந்தாலும் மீதம் 4 இருக்கிறது. எனவே, உங்களைப் பொறுத்த வரையில் அந்த ஒன்றியத்தின் மக்கள் தொகைக் கணக்குப்படி 3 தான் தேவை. ஆனால், எப்படியோ அங்கே 5 தந்திருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி ஆய்வு செய்யலாம். ஆனால், நிச்சயமாக இப்போது ஆரம்பிப்பதற்கு அதிலே சாத்தியக்கூறு இல்லை. எதிர்காலத்திலே இதைப்பற்றி, அதாவது மக்கள் தொகை ஆய்வைக் குறைக்கிற போது, அந்த நேரத்திலே இதைப்பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் ஆரம்பிக்கவில்லை என்று சொல்கிற ஊர் இருந்தால் அதிலே ஆரம்பிக்கலாம். (குறுக்கீடு) இரண்டு கேள்விதான்.

(ஆ) பழவந்தாங்கல் இரயில்வே சுரங்கப்பாதையைப் பயன்படுத்த சாலை வசதி அமைக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு திருவாளர்கள் ப. ரங்கநாதன், டி. சுதர்சனம் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னைக்கு அருகாமையில் உள்ள பழவந்தாங்கல் இரயில்வே நிலையத்தில், பல இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பழவந்தாங்கல் இரயில்வே சுரங்கப் பாதையைப் பயன்படுத்தும் வகையில் சாலை வசதி அமைக்காதது குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.